# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 20.06.2023 supeedsam.com supeedsam@gmail.com


## விடுதலைப் புலிகளின் தலைவர்
# பிரபாகரனின் மரணத்தில் மீண்டும் சர்ச்சை

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் படையினரால் சடலமாக மீட்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுதி யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் பிரபாகரனின் மரணம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

குறிப்பாக பிரபாகரனின் மரபணு (DNA ) பரிசோதனை,

02 ஆம் பக்கத்தில்...



# துணிவு இருந்தால் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்



துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலையாவது உடன் நடத்துமாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்குச் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் எவ்வாறானதொரு ஆணையை வழங்கினாலும் அதனை ஏற்பதற்கு நாம் தயார். எனவே, மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றில் எதையாவது ஒன்றை விரைவில் நடத்தவும் எனவும் தெரிவித்தார்.

# அகிம்சைவழி ஆயுதவழி போராட்டங்கள் தமிழர்களின் உரிமைக்கானவை

## மேத்தானந்த தேரருக்குப் பதிலடி



தமிழர்கள், தமிழ்த் தலைவர்கள் தமக்கான உரிமைகளையே கோருகின்றனர். சிங்களவர்களதோ ஏனைய மக்களதோ உரிமைகளை கோரவும் இல்லை, பறிக்க நினைக்கவும் இல்லை. இதனைச் சிங்கள மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். எல்லாவல மேத்தானந்த தேரர் அண்மையில் ஒரு கருத்தினை வெளியிட்டுள்ளார். பிரபாகரன் கேட்டதையே தமிழ்த் தலைவர்கள் கேட்கின்றார்கள் என்பதே அக்கருத்தாகும்.

02 ஆம் பக்கத்தில்...

# செஞ்சோலைப் படுகொலைக்கு விமானம் வழங்கியது உக்ரைன் அரசாங்கமே!

## தமிழர்களின் வலி இப்போது தெரிகின்றதா?

இலங்கையில் 30 ஆண்டுகளாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தில், பாரிய அவலங்களை எதிர்கொண்ட தமிழனம், அதன் வலிகளை சுமந்து, வடுக்கள் நிரம்பிய அனுபவங்களை கொண்டுள்ளதன் அடிப்படையில், உக்ரைன் நாட்டு மக்களின் வலிகளையும் உணரக்கூடியதாக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கவலை வெளியிட்டிருந்தார்.

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது உக்ரைன் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள

02 ஆம் பக்கத்தில்...



# நெல் விலை நிர்ணயத்தில் ஏழை விவசாயிகளது வாழ்வாதாரமே அரசின் கவனமாக இருத்தல் வேண்டும்



நெல் விலை நிர்ணயத்தில், அரிசி ஆலை உரிமையாளர்கள் அழுத்தம் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டும் என்று

02 ஆம் பக்கத்தில்...

# உலகம் இலங்கையை எத்தியோப்பியாவை போல் பார்த்தது ரணில் நிலைமையை மாற்றினார்

உலகம் ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கையை எத்தியோப்பியாவை பார்ப்பது போல் பார்த்ததாகவும் எனினும் தற்போதைய ஜனாதிபதி சவாலை ஏற்று ஒரு வருடத்திற்கு பின்னர் நாட்டை வழமை நிலைமைக்கு கொண்டு வந்துள்ளார் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதி அதிகார சபைக்கூட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...









# நாட்டின் தற்போதைய நிலைமை தற்காலிகமானது



அமைச்சு பதவிகளை கோரும் இவர்களுக்கு அமைச்சு பதவி வழங்கப்படா விட்டாலும் ஒரு போதும் அரசாங்கத்தை கவிழ்க்கவோ,

02 ஆம் பக்கத்தில்...

# அறநெறி பாடசாலைக்குச் சீருடை வழங்கல்..!



(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்டம் அலஸ் தோட்டம் நாகம்மாள் அறநெறிப் பாடசாலை மாணவருக்குச் சீருடை வழங்கும் பொருட்டாகத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் 230000.00 ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இதற்கான காசோலையை மேற்படி அறநெறிப் பள்ளித் தலைவர் சுந்தரலிங்கம் அவர்களிடம் வழங்கி வைத்தார்.

தமிழ்ப் பண்பாடு மற்றும் சைவநெறியைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு செயற்பட்டு வரும் அறநெறிப் பாடசாலைகளில் அலஸ்தோட்டம் நாகம்மாள் அறநெறிப் பள்ளி முதன்மையான தொன்றாகும். இந்த அறநெறிப் பள்ளியில் 125 மாணவர் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்குச் சீருடை இல்லாத குறையை நீக்கும் பொருட்டாகத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் சீருடை கொள்வனவுக்காக 230000.00 ரூபாவை (18.06.2023) நாகம்மாள் அறநெறிப் பள்ளிக்கு வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இதற்கான காசோலையை மேற்படி அறநெறிப் பள்ளித் தலைவர் சுந்தரலிங்கம் அவர்களிடம் வழங்கி வைத்தார். குச்சவெளியைச் சேர்ந்த திருச்செல்வம் பிரபாகரன் நினைவாக இதற்கான அனுசரணை வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கதிர்காம காட்டுப் பாதையில் 25,000 அடியார்கள்





( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதையில் கடந்த எட்டு தினங்களில் சுமார் 25ஆயிரம் அடியார்கள் பயணித்து வருகின்றனர்.

இலங்கையின் நாலா பாகங்களிலுமிருந்து இந்து பௌத்த மக்கள் சாரி சாரியாக கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டனர்.

கடந்த( 12) திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட இப்பாதை மீண்டும் ஜூலை 25 ஆம் திகதி மூடப்படும். நேற்று (19) திங்கட்கிழமை எட்டாவது நாள் கொடியேற்ற தினமாகும்.

கதிர்காம முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் நேற்று 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

கடந்த வருடம் 28820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

## நாட்டின் தற்போதைய நிலைமை தற்காலிகமானது

அரசாங்கத்தில் இருந்து வெளியேறவோ போதில்லை.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், அரசியலில் இருந்து துடைத்தெறியப்படுவார்கள் என்ற காரணத்தினால், பொதுஜன பெரமுனவினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேற மாட்டார்கள். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தற்காலிகமானது. வெளிநாட்டு கடனை செலுத்துவதை நிறுத்தியதன் பின்னர் அதில் கிடைத்த சாதகமான நிலைமையால் நாடு முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் செலுத்துவதை இடைநிறுத்திய பின்னர், இந்தாண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரை 7 பில்லியன் டொலர் கடனை செலுத்தவில்லை.

எனினும் இந்த காலப்பகுதியில் எமது அந்நிய செலாவணி கையிருப்பு 1.5 பில்லியன் டொலர்கள் மாத்திரமே அதிகரித்துள்ளது.

இதனை தவிர ஆயிரத்து 200 பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. 300 பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என கூறப்பட்ட போது டொலர் எந்தளவுக்கு அதிகரித்தது என்பது உங்களுக்கு தெரியும்.

பொருட்களை இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளதாலும் மக்கள் தமது நுகர்வை நிறுத்தியுள்ளதாலும் நாட்டில் தற்போதைய நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் முதல் மூன்று மாதங்களில் 11 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை மிகவும் தற்காலிகமானது.

பொதுஜன பெரமுனவே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை தமது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த அந்த கட்சியினர் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

## உலகம் இலங்கையை எத்தியோப்பியாவை போல்

கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஒரு வருடத்திற்கு பின்னர் தற்போது மக்களுக்கு சுதந்திரமாக மூச்சி விட முடியும்.

அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகிய போது, அந்த பதவிக்கு தற்போதைய ஜனாதிபதியை தெரிவு செய்வது என நாங்கள் எடுத்த முடிவு குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

எப்படியான அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டை பற்றி சிந்திக்க வேண்டும். எமக்கு தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இல்லை.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டை கட்டியெழுப்பும் அரசியல் நிகழ்ச்சி நிரலில் நாம் இருக்க வேண்டும்.

இதன் காரணமாக நாங்கள் நிபந்தனையின்றி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்தோம். அடுத்த இரண்டரை வருடங்களில் நாட்டை கட்டியெழுப்பும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நாங்கள் அவருக்கு ஆதரவு வழங்குவோம்.

அதேபோல் கோட்டாபய ராஜபக்சவுக்கு நடந்ததை போல் ரணில் விக்ரமசிங்கவுக்கு நடப்பதற்கு இடமளிக்க மாட்டோம் எனவும் மகிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

## செஞ்சோலைப் படுகொலைக்கு விமானம் வழங்கியது உக்ரைன் அரசாங்கமே!

மக்களின் அவலநிலைகள் தொடர்பாக குறிப்பிடும் போது இவ்வாறு கவலை வெளியிட்டிருந்தார்.

உலக சமாதானத்துக்காக, உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை ரஸ்ய அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

இழப்பின் வலிசுமந்து நிற்கும், உக்ரைன் மக்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம்.

சொந்த நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்தாலும், நாடற்ற மனிதர்களாக ஏதிலிகளாக்கப்படுவதும் எத்தனை கொடியது என்பதை ஈழத்தமிழினம் நன்கு அறியும்

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதப் பேரவலமொன்றின் விளிம்பு நிலையில் நின்று, ஏதிலிகளாக அந்தரிக்கும் உக்ரைன் மக்களுக்கும் இதேநிலை தொடரக் கூடாது என்பதை உணரத்தலைப்பட்டிருக்கிறோம்.

இதுவரை 6.5 இலட்சம் உக்ரைன் மக்கள் நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.55 இலட்சம் உக்ரைனியக் குழந்தைகளின் கல்வி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைனிலுள்ள பாடசாலைகளில் ஒருநாளைக்கு சராசரியாக 22 பாடசாலைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

ஒரு கொடிய யுத்தத்திற்குள் நின்று, அந்த யுத்தக் கொடுமைகளின் அத்தனை பக்கங்களையும் அணுவணுவாக அனுபவித்தவன் என்கின்ற வகையில், என்னால் இந்தப் போரையும் அதன் விளைவுகளையும் இலகுவானதாகக் கருதமுடியவில்லை.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரின்போது, உக்ரைன் இலங்கை அரசுக்கு தனது பரிபூரண ஆதரவை வழங்கியிருந்தது. குறிப்பாக 61 மாணவிகளின் உயிரைக் குடித்த, செஞ்சோலைப் படுகொலை உள்ளிட்ட பல விமானத் தாக்குதல்களின் போது, அத்தகைய குண்டுவீசும் விமானங்களை உக்ரைனியர்களே செலுத்தியிருந்தனர்.

இறுதிப்போரின் இறுதி நாட்களில், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை நோக்கி, தமது உயிரைக் காக்கும் ஒரே எண்ணத்தோடு எமது மக்கள் திரண்டிருந்தபோது, அவ்விடங்களில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களிலும் உக்ரைனியர்களில் நேரடிப் பங்கிருந்தது.

நாங்கள் ஒரே நடாக ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று, இந்த உயர்ந்த சபையில் அடிக்கடி கூறிவருகின்ற சகோதர இன நண்பர்கள், ஒரு யுத்தத்தின் கொடுமை எப்படி இருக்கும் என்ற எனது உணர்வை, ஒரு தமிழனின் உணர்வாக மாத்திரம் பார்க்காமல், ஒரு சக மனிதனின் உணர்வாகப் பார்க்கவேண்டும் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## அகிம்சைவழி ஆயுதவழி போராட்டங்கள் ...

அறவழியில் அகிம்சை வழியில் தந்தை செல்வா கேட்டதும், ஆயுத வழியில் விடுதலைப்புலிகளின் தலைவர் கேட்டதும், தற்போது மீண்டும், அறவழியிலும் இராஜ தந்திர வழியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தர் ஐயா மற்றும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் கேட்பதும் தமிழ் மக்களின் உரிமைகளைத் தான்.ஏனைய மக்களின் உரிமைகளை ஒரு போதும் தமிழ்த்தலைவர்கள் கேட்கவில்லை என்பதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல்வாதியுமான மேத்தானந்த தேரர் புரிந்து கொள்ள வேண்டும்.

காலாதி காலமாக தாம் வாழுகின்ற வடக்கு கிழக்குக்குத் தாயக பூமியில்,சுயதிருணய உரிமையுடன் சுய கௌரவத்துடன் வாழவே தமிழர்கள் விரும்புகின்றார்கள். இதனைப் புரிந்தும் புரியாதவர்கள் போன்று அரசியல் தேவைக்காக, சிங்கள மக்களை சிங்கள அரசியல் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றார்கள்.75 ஆண்டுகளாக தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி வந்துள்ளார்கள். மேத்தானந்த தேரரின் மேலுமோர் கருத்தின்படி வடக்கில் தமிழர்கள் களைக் குடியேற்றும் விடயத்தில் கூட தேரர்கள்,சிங்கள அரசியல் தலைவர்களின் அனுமதி இருக்க வேண்டும் என்பதாக அமைந்துள்ளது. அதாவது குருந்தூர் மலையை அண்மித்த 350 இற்கு மேற்பட்ட காணிகளில் தமிழர்களைக் குடியேற்றக் கூடாது என்று ஜனாதிபதியை எச்சரிக்கும் நிலையில் மேத்தானந்த தேரர் தன்னைத் தானே உயர்த்தியுள்ளார்.

தமிழர்களுக்கு என்று பாதுகாப்பு இல்லாத நிலையில் தமிழர்களையும் அவர்களது நிலைத்தையும் எதுவும் செய்யலாம் என்ற நிலைமை 2009 இற்குப் பிற்பட்ட சூழல் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் ஒற்றையாட்சிமுறை, சிங்கள பௌத்த முதன்மை வாதம்,ஆளும் கட்சி எதிர்க்கட்சிகள் முறைமை, காவல்துறை,படைத்துறை,புலனாய்வுத்துறை, தொல்லியல் துறை என யாவும் சிங்கள மயமாகி இருந்தல் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் ஆபத்தாக மாறியுள்ளது.

இவைதவிர தலையாட்டும் ஆளும் கட்சிசார் தமிழ் அரசியல் பொம்மைகளின் பதவிசுகம்,பணசுகம் என்பனவும்,சிறு சலுகைக்கு வாக்களிக்கும் மக்களும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் சிங்கள எதேச்சாதிகாரத்திற்கும், தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கும் வழிகோலி வருகின்றனர்.சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு பதவி மோகம் கொண்ட தமிழ்ப்பொம்மை அரசியல்வாதிகள் மௌனம் காப்பது நக்குண்டு நாவிழந்த கதையாகவுள்ளது.

## பிரபாகரனின் மரணத்தில் மீண்டும் சர்ச்சை

பிரேத பரிசோதனை அறிக்கைகளை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது. இதனைக் காரணங்கட்டி பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், அதனை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து வருகிறது.இவ்வாறான நிலையில், பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தன கோரியுள்ளார்.

பிரபாகரனின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, DNA பரிசோதனை அறிக்கை ,உயிரிழந்தது பிரபாகரன் என உறுதி செய்வதற்கு யாரிடமிருந்து ஈமீஅ மாதிரிகள் பெறப்பட்டன? என்பது தொடர்பான தகவல்களை வழங்கக்கோரி இந்த தகவலறியும் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகத்துக்குதான் இந்த விண்ணப்பித்தை அனுப்பி வைத்திருந்ததாக ஊடகவியலாளர் மிதுன் கூறுகிறார். 'தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்தத் தகவல்களை வழங்கினால் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும்' என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும் ஊடகவியலாளரின் தகவல் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் ஊடகவியலாளர் மிதுன் தெரிவித்தார்.

## நெல் விலை நிர்ணயத்தில் ஏழை விவசாயிகளது...

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் தொடர்பான சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பான இன்றைய (20) விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

தோடர்ந்து உரை நிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர் ஜனா,

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே வரவு செலவுத்திட்டம் மூலமாக ஒதுக்கப்படும் நிதிகள் ஒதுக்கப்படாமல் நாங்கள் எந்தவித அபிவிருத்தி வேலைகளையும் எமது மக்களுக்குச் செய்யமுடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டு இந்த வரவு செலவுத்திட்ட அலுவலகம் சம்பந்தமான விவாதத்தில் எப்படிப் பங்கு பெறலாம் என்று யோசிக்கின்றேன்.

இருந்தாலும் எனது மாவட்ட மக்கள் சம்பந்தமாக சில விடயங்களையும்; இந்த விவாதத்தில் எடுத்துரைக்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக கடந்த 28.05.2023 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தவேந்திரன் மதுசுதன் என்ற 20 வயது மாணவண் இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து தலை மன்னார் வரையான 23 கிலோமீற்றர் கடலை நீந்திக் கடந்திருக்கின்றார். ஒரு சாதனை புரிந்திருக்கின்றார். அதுவும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகரிப்பதனால் ஏற்படும் பின்விளைவுகளையும், பின்விளைவுகளைத் தடுப்பதற்கும் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகா, சிறுவயதில தற்கொலைக்குச் செல்லாத மனோநிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் சாதனைகளை நிறைவேற்ற வேண்டும என்ற சிந்தனையுடன் செயற்பட்டால் இவ்வாறான விடயங்களிலிருந்து விடுபடலாம் என்ற விழிப்புணர்வுகளுக்காக இந்த சாதனையைப் புரிந்துள்ளார். அந்தவகையில் இந்தப் பாராளுமன்றத்தின் ஊடாக அந்த மாணவனுக்கு பாராட்டுக்களைச் தெரிவிக்க வேண்டிய கடமையிலிருக்கின்றேன்.

அது மாத்திரமல்ல இன்றைய விவாதத்தின் ஆரம்பத்திலே 27/2 கேள்வியின் மூலமாக இந்தச் சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் ஒரு கூற்றை முன்வைத்திருந்தார். உண்மையிலேயே விவசாயிகள் சார்பாக நான் அவருக்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன். இன்று மட்டக்களப்ப மாவட்டம் மாத்திரமல்ல அம்பாரை போன்ற பிரதேசங்களிலும் நெல் அறுவடை ஆரம்பித்து விட்டது;. ஆனால் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக அவர்களுடைய நெல்லை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்பது மாத்திரமல்லாமல் நெல்லுக்குரிய சரியான விலையைக் கூட இந்த அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

இன்றைய 27/2 கீழான கேள்விக்குக் கூட விவசாய அமைச்சர் அவர்கள் சரியான பதிலைக் கூறாமல் தாங்கள் கூடி முடிவெடுத்து அறிவிப்பதாகக் கூறியிருக்கின்றானர். இன்றைய பொருளாதார நிலைமையில் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளில் கூட விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு கிலோ நெல்லை 95 ரூபாவுக்கு விற்ற பண்ணைகள், இன்று ஒரு கிலோ நெல்லை 200 ரூபாவுக்கு விற்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. ஏனென்றால் அதற்குரிய உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதாகக் கூறுகின்றனர்.

உண்மையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாக இருந்தால் அரசாங்க விதை உற்பத்திகளுக்கு மாத்திரமல்ல ஏழை விவசாயிகளுக்கும் அந்த உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நெல்வயல் செய்கை பண்ணுவதற்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யும் போது இன்றைய நெல்லின் விலை 75- 80ரூபாவுக்கு மேல் தாண்டவில்லை. எனவே இந்த அரசாங்கம் ஆகக்குறைந்தது நெல்லின் விலையை 120ரூபாவுக்காவது நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாகப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே அவர்கள் அவர்களுடைய நெருக்கடியிலிருந்து மீள்வார்கள். ஒரு கிலோ அரிசி 200 ரூபாவுக்கு விற்கப்படுகின்ற நிலையில். அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லின் விலையை நிர்ணயிக்க முடியாது. அத்துடன் அரிசி ஆலை உரிமையாளர்கள் விலை நிர்ணயத்தில் அழுத்தம் கொடுக்கின்றார்கள். அரசாங்கம், அவர்களது ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கவனத்திலெடுக்க வேண்டும் என்பதுடன் அதற்காக பாடுபட வேண்டும்.

அத்துடன் கடந்த சில வாரங்களாக அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஆந்த அதிபர் சேவை போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது பல்கலைக்கழகப் பட்டம் அத்துடன் பட்டப் பின் கல்வி டிப்ளோமா இருக்க வேண்டும் அத்துடன் 5 வருட சேவைக்காலமும் இருக்க வேண்டும் அதைவிடுத்து கல்வியியல் கல்லூரி முடித்தவர்களுக்கு 6 வருட சேவை அனுபவம் இருந்தால் அதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற சுற்றறிக்கை இருந்தது. ஆனால் அந்த கல்வி டிப்ளோமா பட்டம், பட்டப்பின் டிப்ளோமா, விஷேட தேவைகள் சார் பட்ட பின் கல்வி டிப்ளோமா பெற்றவர்கள் அந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் நேர்முகப் பரீட்சையில் அவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் துரதிஸ்டவசமானது. இலங்கை அதிபர் சேவை தரம் ஐஐஐ ல் ஆட்சேர்ப்பு செய்வதற்காக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இதில் சேவை நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பான வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் 2018.10.19 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதில் சேவை நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக்குறிப்பில் இதற்குப் பின்னர் மேற்கொள்ளும் திருத்தங்களுக்கும், அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையின் ஐஐஐ ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்

இந்த நியமனமானது 2023யிலேயே வழங்கப்படவுள்ளது. எனவே பரீட்சை ஏலவே நடைபெற்றிருப்பினும், 2023இற்கு முன்னர் அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமையவே நியமனம் வழங்கப்படல் வேண்டும் என்பது நியதியாகும். இதன் அடிப்படையில் 2255/55 ஆம் இலக்க 2021.11.26 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 4ஆவது திருத்தத்தின் படி விசேட தேவைகள் சார் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதில் அமுல்படுத்தப்படும் திகதி குறிப்பிடப்படாமையினால் இது 2014 ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது நியதியாகும்.

மேலும் 2010 இல் விஷேட தேவைகள் சார் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவானது சாதாரண பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிற்கு சமமானது என கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் குறிப்பிடுகின்றது. மேலும் திறந்த பல்கலைக்கழக உபவேந்தரினாலும் இது தெட்டத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தி, அதன் அடிப்படையில் அவர்களையும் இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம்!

## இருநாட்டு சுற்றுலாத்துறையை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடல்





(ஹஸ்பர்)

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், ஜப்பான் நாட்டின் மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவை சந்தித்து கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் நீண்டகால நண்பரான மியாசாகியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பான் பாராளுமன்றத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஜப்பான் பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இருதரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார்.

ஜப்பானில் உள்ள மியாசாகி கடற்கரைக்கு வருகைதரும் உலாவர்கள்(ண்தனூனுணூண்) ஊடாக இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த உலாவல் இடங்களில் (ண்தணூனூ ண்ணீணிஞ) ஒன்றாக அருகம்பே கடற்கரையை ஊக்குவிக்க கடற்கரை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது முன்வைத்தார்.

அத்துடன், அருகம்பே போன்ற உலாவல் இடங்களில் (ண்தணூனூ ண்ணீணிஞ) சமமான ஆற்றலைக் கொண்ட ஜப்பானின் மியாசாகி கடற்கரையை ஊக்குவிப்பது போல், அருகம்பே கடற்கரையை உள்ளூர் அதிகாரிகளால் சர்வதேச உலாவர்களுக்காக (குதணூனூனுணூண்) ஊக்குவிக்கப்படும் எனவும் ஷிம்பேய் மட்ஷிதாவிடம் ஆளுநர் கூறினார்.

அருகம்பே கடற்கரையை சர்வதேச உலாவர்களுக்கு (குதணூனூனுணூண்) ஊக்குவிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஷிம்பேய் மட்ஷிதா ஆளுநரிடம் உறுதியளித்தார்.

மேலும் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளுக்காக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் சுற்றுலாத் தளங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடினார். அதற்கும் ஷிம்பேய் மட்ஷிதா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

# அகில உலக ரீதியாக திருகோணமலை மாணவிகள் சாதனை.!





( ஹஸ்பர் )

Green Tree English Academy திருமதி.மரிய ஜெயந்தா ஆசிரியரின் கற்பித்தலின் கீழ் பயிற்றப்பட்டு London Noisy Class room நடாத்திய International Oratory Festival (Zoom மூலம்) போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களில் செல்வி.பிரியங்கா உமாசங்கர் மற்றும் செல்வி. தீப்சிக்கா பிரபாகரன் அவர்கள் அகில உலக ரீதியில் 3ம் இடத்தைப் பெற்று Bronze medal வென்று எமது இலங்கை நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# மாட்டிறைச்சி சாப்பிடுவது தொடர்பில் முக்கிய தீர்மானம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உணவிற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் தீர்மானிப்பதற்கான விசேட கலந்துரையாடல் 2023.06.20 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம் றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுப்பதற்கான விசேட பொறிமுறைகளை வகுத்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது .

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்ப் பரவலின் தன்மை மற்றும் ஏனைய சுகாதார நடைமுறைகளை கவனத்திற்கொண்டு பிரதேச உலமா சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புடன் விசேட தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் அவர்களினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதுடன் மாறாக அனுமதி பெறப்படாமல் நோய்வாய்ப்பட்ட மாடுகளை அறுப்பவர்களுக்கு அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# முனைக்காடு பாடசாலைக்கு பழைய மாணவர்களால் நூல்கள் வழங்கி வைப்பு





மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் 1998ம் ஆண்டு தரம் 5ல் கல்வி கற்ற மாணவர்கள் ஒன்றிணைந்து அவர்களுடன் சமகாலப்பகுதியில் கல்வி கற்று அமரத்துவமடைந்த தங்களது தோழர் கு.மனோகரன் அவர்களின் நினைவாக சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பெருந்தொகை நூல்களை வித்தியாலய அதிபர் மதிப்பிற்குரிய திரு கை. தெய்வேந்திரகுமார் அவர்களிடம் இன்று காலை கையளித்தனர்.

அமரத்துவமடைந்த தங்களது தோழரது கனவுகள் மெய்ப்படவும் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையின் தற்கால மாணவ சமூகத்தின் உயற்ச்சிக்கு பாரிய பங்களிப்பு நல்கும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தங்களுடன் கல்வி கற்று உள் நாட்டிலும் தாயகத்தை விட்டு வேறு தேசங்களில் புலம்பெயர்ந்து வாழும் தங்களது வகுப்பு தோழர்களை ஒன்றிணைத்து அவர்களது நிதிப்பங்களிப்புடன் முன்மாதிரியான இச் சேவையினை அவர்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி வித்தியாலயத்துடன் இணைந்து தொடர்ந்து பயணிக்கவுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் மேலுமொரு தொகுதி நூல்களை வித்தியாலய நிருவாகத்திடம் கையளிக்கவுள்ளதாக குறித்த வகுப்பு மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

# லாகுகல பிரதேச செயலகத்தில் இரத்ததான நிகழ்வு





(றியாஸ் ஆதம்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கில் அம்பாறை, லாகுகல பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு திங்கட்கிழமை (19) அப்பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சர்வதேச இரத்தக் கொடையாளர் தினத்தினை முன்னிட்டு, ''உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்'' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் லாகுகல பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிருவாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நளில், சமூக சேவை உத்தியோகத்தர் ஆர்.என். ரவீந்திரன், பொத்துவில் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.கருணாரத்ன, தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

லாகுகல பிரதேச செயலக சமூக சேவை பிரிவு மேற்குறித்த இரத்ததான நிகழ்வினை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச யோகா தினத்தையோட்டி யோகா விழிப்புணர்வு நடைபவனி!

(அபு அலா)

சர்வதேச யோகா தினத்தையொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி இன்று (21) இடம்பெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வள்ளிபுரம் கணகசுந்தர் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த நடைபவனி, நாளை காலை 7.00 மணிக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவடையவுள்ளது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் Prof.Ankuran Dutta & Director, Swami Vivekananda Cultural Center, High Commission of India, Colombo, Prof. (Mrs) Chandravathany.G. Devadasan Rector, Trincomalee Campus, EUSL, Dr. (Mrs) R.Srithar Provincial Commissioner, Department of Indigenous Medicine & Eastern Province, Trincomalee உள்ளிட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் பொதுமக்களும் கலந்துகொள்ளுமாறும் அழைக்கப்பட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண அமைச்சுக்களின் பதில் செயலாளர்கள் கடமையேற்பு!





(அபு அலா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவி வகித்த ஏ.மன்சூரும், கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக, உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்த நாகராசா மணிவண்ணன் ஆகியோர் தங்களின் கடமைகளை (19) பொறுப்பேற்றுக்கொண்டனர்.

கிழக்கு மாகாண அமைச்சுக்களில் நிலவி வந்த செயலாளர் பதவிகளுக்கு பதில் செயலாளர்களை நியமிப்பது தொடர்பில் பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் பரிந்துரை செய்யப்பட்டதையடுத்து, அவர்களுக்கான இந்நியமனம் வழங்கப்பட்டது.

அதற்கமைவாக, குறித்த அமைச்சுக்களுக்கு பதில் செயலாளர்களாக நியமிக்கப்பட்ட ஏ.மன்சூர் மற்றும் நாகராசா மணிவண்ணன் ஆகியோர்கள் தங்களின் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண ஆணையாளர்கள், மாகாண பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக கடமைப்பொறுப்பேற்ற உள்ளூராட்சி ஆணையாளர் நாகராசா மணிவண்ணனை அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் அவரை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கதிர்காம கோடியேற்றத்தின் போது



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவ கொடியேற்றம் நேற்று (19) திங்கட்கிழமை மாலை கதிர்காமம் பால்குடி பாவா பள்ளி வாசலில் இடம் பெற்ற போது...

**படங்கள் வி.ரி.சகாதேவராஜா**

# நோயற்றவையென உறுதிப்படுத்தப்பட்ட மாடுகளே கல்முனையில் அறுவைக்காக அனுமதிக்கப்படுகிறன

## கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல தெரிவிப்பு

(ஏ.எம்.அஸ்லம்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக அறுக்கப்படும் மாடுகள் நன்கு பரீட்சிக்கப்பட்டு, நோயற்ற மாடுகள் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படுவதாக மாநகரசபையின் கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல தெரிவித்தார்.

இது குறித்து திங்கட்கிழமை (19) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது;



அண்மைக்காலமாக நாட்டின் சில பகுதிகளில் மாடுகள் சிலவற்றுக்கு ஒரு வகையான நோய் பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக மாடுகள் அறுக்கப்படுகின்ற விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்பதை அறியத் தருகின்றேன்.

குறிப்பாக விலங்கறுமனைகளுக்கு அறுவைக்காக கொண்டு வரப்படுகின்ற மாடுகள் அனைத்தும் எம்மால் நன்கு பரீட்சிக்கப்பட்டு, எவ்வித நோயும் அற்றவை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நோய்த் தொற்றுக்குள்ளான அல்லது சந்தேகத்திற்கிடமான மாடுகளை அறுப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்படுவதில்லை.

மேலும், தற்போதைய சூழ்நிலையில் மாடுகளை கொள்வனவு செய்யும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறித்து மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

ஆகையினால், இது விடயத்தில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சுற்றித்திரியும் எருமை மாடுகள் இனந்தெரியாதோர் இறைச்சிக்காக கோல்லப்படுகின்றன

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் சுற்றித் திரியும் எருமை மாடுகளை இனந்தெரியாதோர் அதனை கொன்று இறைச்சிக்காக எடுத்துச் செல்வதாக கொத்மலையின் பல கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொத்மலை, கடதொர, ரன்மல்ஹா பிரதேசத்தில் நேற்று முன் தினம் (18) இரவு பெரிய எருமை மாடொன்றை கொன்று அதன் தலையை வீதியில் விட்டுவிட்டு எஞ்சிய பாகங்களை இறைச்சிக்காக சிலர் எடுத்துச் சென்றுள்ளனர். மேலும் கிராமங்களில் இரவு வேளைகளில் சுற்றித் திரியும் எருமைகளை கொன்று இறைச்சியை எடுத்து சென்று அதன் இறைச்சியை கடைகளில் விற்பனை செய்வதை சிலர் வழக்கமாக கொண்டுள்ளதாகவும் கிராம மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கொத்மலையை சூழவுள்ள கிராமங்களில் அதிகளவான எருமைகள் சுற்றித் திரிவதாகவும், இவற்றில் பெரும்பாலான விலங்குகள் மக்களால் கைவிடப்பட்டமையினால் தற்போது காட்டு எருமைகளாக மாறியுள்ளதாகவும் மலையக சுற்றாடல் அமைப்புக்கள் தெரிவிக்கின்றனர்.சுற்றித் திரியும் எருமை மாடுகளை இறைச்சிக்காக வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்கள் சிலர் வேட்டையாடி வருகின்றனர்.எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி சுற்றித் திரியும் எருமை மாடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு தீர்வை பெற்றுக்கோடுத்த ஆளுநர் சேந்தில்

(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தீர்வை பெற்றுக்கொடுத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமதொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.



அண்மையில் உரப்பற்றாக் குறையால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மூன்று மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்தனர்.

விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, விரைவாக உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமென விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்திருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுசென்றதுடன் உரப் பற்றாக்குறைக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போதிய உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை கமத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

பல காலமாக நிலுவையில் இருந்த இப்பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் உடனடி தீர்வு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் அரங்கேறிய பசு கோலை அராஜகம்

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட எல்லைக் கிராமங்களான மைலத்தமடு மாதவணை பிரதேசத்தில் ஞாயிறு 18.ணி6.2023 வயிற்றில் கன்றுடன் இருந்த பசு ஒன்று துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டு இறைச்சியை களவாடிச் சென்றதன் பின்னர் பசுவின் தலை கழிவுகள் மற்றும் வயிற்றில் இருந்த கன்று என்பன வீசப்பட்டுள்ள நிலையில் மகாவலி கண்காணிப்பு காரியாலயத்திற்கு மிக அருகில் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகள் மற்றும் மாடுகளை களவாடுதல் அல்லது காயப்படுத்துதல் என்பன இப்பிரதேசத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

அதே வேளை இவ்விடயம் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மகாவலி அதிகார சபைக்கு எதிராக போடப்பட்ட வழக்கின் தீர்ப்பில் அங்குள்ள ஆக்கிரமிப்பாளர்களை மகாவலி அதிகார சபையினர் வெளியேற்ற வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த நிலையில் நீதிமன்ற கட்டலளக்கமைய குறித்த திகதிக்கு முன்னர் வெளியேற்றுவோம் என மகாவலி அதிகாரிகள் மூலம் நீதிமன்றத்திற்கு உத்தரவாதம் வழங்கிய நிலையில் இன்னும் பூரணமாக சட்டவிரோத



குடியேற்றவாசிகள் வெளியேற்றப்படவில்லை.

அத்துடன் இச்செயற்பாடுகளை வழக்குத் தொடுத்தவர்கள் அதாவது நீதிமன்ற அவமதிப்பாக இதனை எடுத்துச் செல்லவில்லை என்பதும் பண்ணையாளர்களின் விசனமாக உள்ளது.

இன் நிலையில் இப்பிரதேசத்திற்குரிய கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கதாகும்.

இப்பிரதேசம் மகாவலி ஆ வலயமாக பரகடணப்படுத்தப் பட்டதன் பின்னரே இப்படியான செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

# வன்னி ஹோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 100 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(ரக்ஸனா)

அவுஸ்ரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் கேகாலை மாவட்டத்தில் வரக்காப்பொல பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18.06.2023) வரக்காப்பொல ஆர்.ஜே.வரவேட்பு மண்டபத்தில் சமூக ஆர்வலரும் சாந்தா மரியால் குணதீபன் தலைமையில் இடம் பெற்றது.

வரக்காப்பொல சமூகம் வன்னி ஹோப் நிறுவனத்திற்கு வரக்காப்பொல பிரதேசத்தில் பின் தங்கிய ஐந்து பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குமாறு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. வன்னி ஹோப் நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இலங்கையில் உள்ள பின்தங்கிய மாணவர்களின் கல்வி நலனுக்காகவும் அவர்களின் எதிர்காலத்திற்காகவும் பல்வேறு வகையான உதவிச் சேவைகளை ஆற்றிவருகின்றது.







குறிப்பாக பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்கள், கிராமப்புற பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் வசதிகள், கற்றல் உபகரணங்கள், மாணவர்களுக்கான வழிப்புணர்வுகள், கணிணிகூடங்கள் நிறுவுதல் போன்ற பல்வேறு கல்வி சார்ந்த செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் இன, மத, பிரதேச வேறுபாடின்றி செய்து வருகின்றது.

அந்த இடிப்படையில் அம்பேபுஸ்ஸ தமிழ் வித்தியாலயம், பனான தமிழ் வித்தியாலயம், தஸ்னாவ தமிழ் வித்தியாலயம், மாதெனிய தமிழ் வித்தியாலயம், நியந்துருபொல தமிழ் வித்தியாலயம் ஆகிய ஐந்து பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கே இந்த கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர்களான என்.முரளீதரன், எம்.ரீ. எம். பாரீஸ், விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்ததுடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வரக்காப்பொல பிரதேசசமூக ஆர்வலர்கள், கோயில் நிர்வாகிகள், பெற்றோர்கள், மாணவர்னகள் பல பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போசாக்கை அதிகரிக்கும் நோக்குடன் வீரர்களுக்கு போசாக்கு உணவு கையளிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் தெரிவாகி மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குப்பற்றச் செல்லும் மாணவர்களின் போசாக்கை அதிகரிக்கும் நோக்குடன் மன்.புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சுவீஸ் குழு வங்காலை அமைப்பின் ஊடாக போசாக்கு உணவு பொருட்கள் கையளிக்க்பட்டன.

புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக்குழு சுவிஸ் அமைப்பு தனது நிதியின் மூலம் வங்காலை அமைப்பினூடாக மன்னார் மாவட்டத்தில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளுக்கு உதவி செய்வதில் அன்மைகாலமாக அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

இதற்கமைய மன்.புனித ஆனாள் தேசிய கல்லூரி அதிபர் பிரான்சிஸ் ஸ்டான்லி டிமெல் லெம்பேட் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய மாவட்டமட்டத்தில் தெரிவாகி மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் அவர்களுக்கான நிறை உணவான கடலை , பயறு , பால் , வாழைப்பழம் ஆகியன வழங்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை (16) வங்காலை புனித ஆனாள் தேசிய கல்லூரியில் அதிபரிடம் வழங்கும் நிகழ்வாக இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைப்பின் தலைவர் , செயலாளர் , பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பொருட்களை கையளித்தார்கள்

# தோழுநோயை கட்டுப்படுத்துவதற்கான திட்டமிடல் கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு அறையில் இன்று (20) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல்.எம் றிபாஸ் அவர்களின் தலைமையில் தொழுநோய் ஒழிப்பு திட்டமிடல் கூட்டம் அரச சார்பற்ற பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது .

பிராந்திய தொற்று நோய்த்தடுப்பியலாளர் வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பஸால் அவர்களினால் எற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ. வாஜித் அவர்களும்



திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம் மாஹிர் அவர்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் பொது சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டதுடன் அஈகூ நிறுவனத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் ரகு பாலசிங்கம் பிராந்திய முகாமையாளர் செல்வரத்தினம் ஜெபசுதன் செயற்றிட்ட முகாமையாளர் ரகந்தா அபேயக்கோன் செயற்றிட்ட உத்தியோகத்தர் என். வேனுகோபன் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர் கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயை கண்டறிவததற்கான பிரசோதனைகளை விரிவுபடுத்தி தொழுநோயை பூரணமாக கட்டுப்படுத்துவதற்குமான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இக்கலந்துரையாடலின்போது பணிப்பாளர் அவர்கள் வலியுறுத்தியதுடன் இதற்காக அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பை மேலும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களினால் மடிக்கணினிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# போதுப் போக்குவரத்திற்கு இடையூறு

## சட்டவிரோத மீன் வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை





(பாறுக் ஷிஹான்)

பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்ற சட்டவிரோத மீன் விற்பனை செய்கின்ற வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகள் நாற்சந்திகள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் அண்மைக் காலமாக சட்டவிரோதமான மீன் விற்பனை வியாபார நடவடிக்கைகள் அதிகரித்து வருவதுடன் பல்வேறு விபத்து சம்பவங்களும் இடம்பெற வாய்ப்புள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனை அடுத்து நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிந்தவூர் பிரதேச சபை நிந்தவூர் பொலிஸ் நிலையம் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் ஒன்றினைந்து இவ்வாறான சட்டவிரோத மீன் விற்பனை வியாபார நடவடிக்கை இடம்பெறும் இடங்களை இன்று அடையாளப்படுத்தி எச்சரிக்கை அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த துண்டுப்பிரசுரத்தில் ஏலவே நிந்தவூர் பிரதேச சபை சட்டவிரோத மீன் விற்பனை வியாபார நடவடிக்கைகளை தவிர்க்குமாறு கூறி பிரேரணைகளை நிறைவேற்றி கட்டுப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மீண்டும் இவ்வாறான சட்டவிரோத வியாபாரங்கள் குறிப்பாக மீன் விற்பனை முக்கிய சந்திகளில் சட்டவிரோதமாக அதிகரித்துள்ளதாக பொதுமக்களிடம் இருந்து தற்போது பல்வேறு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது இன்று தியேட்டர் வீதி அலியாண்டை சந்தியில் இவ்வாறு எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டதுடன் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம் றயீஸ், நிந்தவூர் பிரதேசசபை செயலாளர் திலகா பரமேஸ்வரன், நிந்தவூர் பொலிஸ் நிலைய அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச்சுகாதார பரிசோதகர்கள், வருமான வரி பரிசோதகர்கள், பொதுச்சந்தை குத்தகைக்காரர், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு விழா







(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் 18/06 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தன.

மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் சு.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் மற்றும் சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் க.சிவசுதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஆயுர்வேத வைத்தியர் திருமதி லி.புஷ்பராணி, சந்திரபுரம் கிராம அலுவலர் பா.சுபாஷன், மட்டுவில் கிழக்கு கிராம அலுவலர் செல்வி நா.தர்மினி, மட்டுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் திருமதி ம.சோபிகா மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக கிராமத்தின் மூத்தோர்கள் கௌரவிப்பு, ஆண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மற்றும் கலை நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றிருந்தன.

# ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நுவரேலியா தபால் நிலையம்



(செ,திவாகரன் நானுஓயா)

இலங்கையில் பல்வேறு சுற்றுலா இடங்கள் உள்ளன. இதில் அதிகமான சுற்றுலா பயணிகள் தங்களுக்குப் பிடித்தமான இடங்களில் நுவரெலியாவை ஒன்றாக அடிக்கடி குறிப்பிடுகின்றனர்.

இதில் ஆங்கிலேயர்கள் நுட்பத்தின்படி சிவப்பு செங்கல் கொண்டு நுவரெலியா பிரதான நகரின் மையத்தில் உள்ளது இது இலங்கையின் பழமையான கட்டிடங்களில் ஒன்றாகும்.

விடுமுறை நாட்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா நகருக்கு படையெடுத்து வரும் நிலையில், குறித்த சுற்றுலாப் பயணிகளால் அழகிய இயற்கை சுற்றுச்சூழல் நடுவில் அமைந்துள்ள பிரதான தபால் நிலையம் அழிவை எதிர்நோக்கி வருகின்றமை அனைவரையும் கவலையடைய வைத்துள்ளது.

விலைமதிப்பற்ற வளமாக கருதப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனமான ஜெட்வின் நிறுவனத்திடம் ஒப்படைக்க சோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு பலரும் எதிர்ப்பு காட்டுவதுடன் பிரதானமாக நுவரெலியா மக்கள் குரல் எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

எனினும் சுமார் ஆறு வருடங்களுக்கு முன் இவ்வாறு தெரிவித்து வந்தனர் அத்துடன் தபால் நிலைய ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பிலும் ஈடுப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

மீண்டும் இவ் பழமையான கட்டிடத்தினை தன்வசமாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


# தம்பலகாமத்தில் இலவச நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும், தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவையானது 2023.06.21 ந்திகதி அன்று புதன் கிழமை காலை .8.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் தெரிவித்தார்.

இதில் இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆயுர்வேத வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொது சன மாதாந்த உதவி கொடுப்பனவு, நோய் உதவி கொடுப்பனவு (புற்று நோய், சிறு நீரக நோய்) , மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர் ,தேசிய அடையாள அட்டை இறப்பு பிறப்பு சான்ளிதழ் தொடர்பான பல சேவைகள் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதுடன் பொது மக்கள் கலந்து கொண்டு இலவச சேவையினை பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்..

# அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவராக சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமட் நியமனம்



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவராக சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமட் நியமனம்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமட் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

20.06.2023 (செவ்வாய்) பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் இந்நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டது.

ஏற்கனவே இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இணைத் தலைவர்களாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

# இந்து சமய கலாசார பணிப்பாளர் சேனையூர் நாகம்மாள் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார்...!





(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்டத்தின் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க சேனையூர் அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தில் (18) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங்கம் அனிருத்னன் வழிபாட்டில் ஈடுபட்டார்.

# அல்- பஹ்ரியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் ஒன்று கூடல்









(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அல் -பஹ்ரியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் ஒன்று கூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை(18) காலை முதல் மாலை வரை சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் தலைமையில் பாடசாலையில் வளாகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முதலில் அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்தியம் முழங்க அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் தேசிய கொடி பாடசாலை கொடி என்பன ஏற்றப்பட்டு தேசிய பாடசாலை கீதங்கள் இயற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வின் முதலில் கிராஅத் ஓதப்பட்டு வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. குறித்த வரவேற்புரையினை முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் சட்டத்தரணியும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவியுமான ஆரிகா காரியப்பர் நிகழ்த்தினார்.

மேலும் தலைமையுரையை பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் மேற்கொண்டதுடன் அண்மைக்காலமாக பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கின்ற செயலில் சில குழுக்கள் திட்டமிட்டு செயற்படுவதாகவும் சமூக ஊடகங்களில் போலி அடையாளங்களுடன் இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்வோர் உண்மையான தகவல்களை பெற்று அதனை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும்இ உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ் உரையாற்றி நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ அஸ்தர் பாடசாலை பழைய மாணவிகள் சங்க பிரதித்தலைவரும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர் பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டதுடன் ஓவியக்கண்காட்சி மைதான நிகழ்வு சிறுவர்களின் நடனம் உட்பட பழைய மாணவிகளின் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/அல் பஹ்ரியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை)யின் பவளவிழா நிகழ்வின் ஒரு கட்டமான மேற்படி நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 03

# எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எங்கும் எதிலும் அவதான மிருந்தால்
எங்க எது நடந்தாலும் நன்மைக்கே
என்கின்ற மனப் பக்குவமும் எதுவும்
நன்றாகவே நடந்தது
என்பதும் மனதில்வரும்

எந்த ஒரு இயக்கமும் ஒரு மூலத்தில் இருந்துதான் ஆரம்பமாகின்றன. அந்த மூலமே இயக்க சக்தியாகவும் இருக்கும். எல்லா மூலங்களுக்கும் ஒரு ஆதி மூலம் இருக்கும். அதைத்தான் நாம் இயக்க சக்தி என்கிறோம். அதனைப் பலர் இறைசக்தி என்கின்றனர். இறைவன் 'தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்' எனவும், 'அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது' எனவும் இந்து மதம் கூறுகின்றது. காரணமில்லாமல் காரியமில்லை. காரியமில்லாமல் காரணமில்லை. எந்த இயக்கத்துக்கும் ஓர் அடிப்படை உண்டு என்பதனால் அந்த இயக்கத்துக்குக் காரணமான இயற்கையை இந்துக்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த வழமை, பண்பாடு, நடைமுறை இப்போதும் ஏன், எதற்கு என்றில்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதைத்தான் நம்பிக்கை என்கின்றனர். ஒருசிலரும் பகுத்தறிவுவாதிகளும் இதனை மூடநம்பிக்கை எனவும் கூறுகின்றனர். அது அவரவர் பார்வை, புரிதல், தான் பெற்றுள்ள சிந்தனைத் தெளிவு என்பவற்றைப் பொறுத்தது. அதன் அடிப்படையில் ஒவ்வொன்றும் நடந்து, கடந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஒரு செயலுக்கு நமது எண்ணம், செயல், சிந்தனை, ஒழுங்கு, முயற்சி ஆகியன காரணமாக இருக்கின்றன. ஒரு செயல் உரிய இலக்கை அடைந்து வெற்றி பெறு



**சோலையூர்க் குருபரன்**

வதற்கு விடா முயற்சி முக்கியமாகும். விடா முயற்சி இல்லாதவன் தோல்வியைக் கண்டு சரிந்து விடுவான். விடாமுயற்சியும், இலட்சியமும் சாதனை புரிவதற்கு அவசியமாகிறது. அதைச் செய்வேன், அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன் என்று கூறுவதில் அர்த்தமில்லை. செயலில் இறங்கிச் செய்து காட்டுபவனே உண்மையான சாதனையாளன் ஆகின்றான். தோல்வியில் துவண்டு விழுபவன் சாதனையாளனாக இருக்க முடியாது. விழுந்து எழும்பி, விழுந்து எழும்பித் சுதாகரித்துக் கொண்டு தனக்குரியபடி பாதையைத் தெரிவு செய்து வெற்றி நடை போடுபவனே, தடைகளைத் தகர்த்தெறிந்து இலட்சியத்தை அடைவான். அவன் காரணங்களுக்கு வியாக்கியானம் செய்வதை விடுத்து சரித்திரம் படைப்பவனாக இருப்பான்.

காரண, காரியங்கள் எப்படி, எவ்வாறு நடந்தாலும் செயலொன்று நிறைவேறி இருக்கும். அந்தச் செயல் நமது எண்ணம், விருப்பம், முயற்சி, சிந்தனை, ஒழுங்கு என்பவற்றின் அடிப்படையில் நடந்திருக்கும். எந்த ஒரு செயலும் விதிக்கப்பட்ட ஒழுங்கின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. ஒரு சம்பவம் நிகழ்வதற்கு செயல் ஒன்று மூலகாரணமாக இருத்தல் வேண்டும். செயலொன்றின் சாதக, பாதக நிலைக்கும் அவற்றின் வெற்றி தோல்விக்கும் ஏதோ ஓர் அடிப்படை இருத்தல் வேணடும். அந்த அடிப்படையைக் கண்டு பிடித்தால் உனது வெற்றி நிச்சயமாகும். 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்'. இது பகவக்கீதை கூறிய அருள் வாக்கு. இதிலிருந்து யாரும் தப்பவோ, விலகிச் செல்லவோ முடியாது. எல்லாம் இயற்கையோடு ஒத்து நடந்து கொண்டே இருக்கும். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், செய்தாலும் செய்யாது விட்டாலும் நடப்பது நடந்தே தீரும். இது யாருக்கும் எவருக்கும் விதி விலக்கல்ல. இவ்வாறுதான் உலகில் யாவும் நடந்து கொணடடிருக்கின்றன.

ஒரு கோயிலில் வருடாந்த உற்சவத் தேரோட்டத்தின் போது தேர்ச் சில்லுக்குள் அகப்பட்டு இருவர் இறந்தனர். இறந்தவர்களின் உடல்கள் இரண்டையும் அங்கிரந்து வெளியேற்றிய பின்னர் பரிகார பூசை செய்துவிட்டுத் தேரை இழுத்துச் சென்றனர். தேர் உரிய இடத்துக்கு வந்து நின்றது. விதி வலியது. விதி விளையாடி விட்டது, என்றெல்லாம் பலரும் பேசி



னர். இன்னும் சிலர் இவ்விடத்தில் வந்துதான் இது நடக்க வேண்டுமா? ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போவது போல் தெரிகிறது என்றெல்லாம் கூறினார்கள். இன்னும் ஒரு சிலர் இறைவனின் சந்நிதானத்தில் நல்ல சாவு வந்திருக்கிறது. கொடுத்து வைத்தவன் என்றும் கூறினர். ஒருவர் பிறக்கும் போதே அவரின் விதி நிர்ணயிக்கப்படுகிறது. எங்கு, எப்போது, எவ்வாறு அவரின் உயிர் எடுக்கப்பட வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அதன்படியே அவரின் உயிர் அவரிடம் இருந்து எடுக்கப்பட்டிருக்கும். இது சிதம்பர இரகசியம்போல் புரிந்தும் புரியாமலும், சில முடிச்சுகளுக்கு விடை தெரியாமலும் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். இதுதான் உண்மையும்கூட. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

திருவியைாடல் புராணத்தில் பழி அஞ்சிய படலத்தில் ஒரு சம்பவம் கதையாக விபரிக்கப்படுகிறது. 'ஒரு புரோகிதன் மனைவியை அழைத்துக் கொண்டு மனைவியின் பிரசவத்துக்காகப் பக்கத்துக் கிராமத்தக்குச் செல்கின்றான். போகும் வழியில் பெரும் காற்றுடன் கூடிய மழை பெய்கிறது. அருகில் இருந்த பெரிய மரத்தின் கீழ் இருவரும் ஒதுங்குகின்றனர். காற்றும் மழையும் பலமாகிறது. மனைவிக்குப் பிரசவ வலியும் அதிகரிக்கிறது. மனைவி துடிக்கிறாள். மனைவியை மரத்தடியில் இருக்க வைத்துவிட்டு மருத்துவிச்சியை அழைத்துவரப் புரோகிதன் செல்கிறான். காற்றும் மழையும் பலமாகிறது. மரத்தின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த அம்பொன்று காற்றின் வேகத்தால் விடுபட்டு வந்து மனைவியின் வயற்றில் குத்துகிறது. அம்பு குத்தியதனால் மனைவியும் வயிற்றில் இருந்த குழந்தையும் இறக்கின்றனர். புரோகிதனும் மருத்துவிச்சியும் வந்து பார்த்தபோது மனைவி அம்புபட்டுப் பிணமாகக் கிடக்கிறாள். அதிர்ச்சியடைந்த புரோகிதன் சுற்றுமுற்றும் பார்க்கிறான். மரத்தின் பின்புறமாக வேடன் ஒருவன் மழைக்கு ஒதுங்கி வில்லும், அம்பறாத்துணியில் அம்போடும் நிற்கிறான். வேடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். மனைவி இறந்து கிடக்கிறாள். வில், அம்போடு வேடன் நிற்கிறான். இரு சாட்சிகளும் இருக்கின்றனர். வேடன் மறுக்கிறான். புரோகிதனும்



மருத்துவிச்சியும் நம்பவில்லை. வேடனைப் பாண்டிய மன்னனிடம் அழைத்துச் செல்கின்றனர்'.

'வேடன் அரச சபையில் மன்னனுக்கு முன்னால் நிறுத்தப்படுகிறான். விசாரணை நடக்கிறது. இரு சாட்சிகளும் வேடன் கொலை செய்தான் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். வேடன் தான் கொலை செய்யவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறான். மன்னனுக்குத் தரும சங்கடமாகிறது. நாளை தீர்ப்புக் கூறப்படும் எனத் தீர்ப்பினை ஒத்தி வைக்கிறான். நீதி தவறாமல் தீர்ப்புக் கூறும் மன்னனுக்கு இவ்வாறு ஒரு சோதனை வந்ததையிட்டு வேதனை அடைந்து சொர்க்கநாதப் பெருமானிடம் முறையிடுகிறான். மன்னன் உறங்கிக் கொண்டிருக்கும் போது ஓர் அசரீரி கேட்கிறது. மன்னா இந்தத் தெருவில் நாளை நடக்கும் திருமணத்திற்கு மாறு வேடத்தில் புரோகிதனையும் அழைத்துக் கொண்டு வா என்றதும் திடுக்கிட்டு சொர்க்கநாதரை வழிபடுகிறான். காலையில் இருவரும் மாறு வேடத்தில் குறித்த தெருவில் நடக்கும் திருமணத்திற்குச் செல்கின்றனர். ஊர்வலமாக மேள, தாளம், நாதஸ்வரம் முழங்க மணமகன் அழைத்து வரப்படுகிறான். திருமணப் புரோகிதருக்குத் தானம் கொடுப்பதற்காக பசுவொன்று யாக குண்டத்துக்கு அருகில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது'.

'மன்னனுக்கு அருகில் நின்ற எமதூதர்கள் இருவர் தமக்குள் பேசிக் கொள்கின்றனர். அதில் ஒருவர் மணமகனின் உயிரை எப்படி எடுக்கப் போகின்றோம் எனக் கேட்க, மற்றையவர் நேற்று நாம் காற்றையும் மழையையும் வரவழைத்து. எப்பவோ எய்து மரத்தின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த அம்பைக் கொண்டு புரோகிதனின் மனைவியின் உயரைப் பறித்தது போல் இன்றைக்கு அங்கே கட்டி இருக்கும் பசுவுக்கு உருவேற்றிப் பசுவைக் கொண்டு மணமகனின் உயிரைப் பறிக்கப் போகிறோம் என்றதும் மன்னன் உனது மனைவியை நேற்று யார் கொன்றார்கள் என்பது உனக்கு இப்போது விளங்குகிறதல்லவா. மணமகனைக் காப்பாற்றி, சுற்றவாளியான வேடனை விடுதலை செய்ய வேண்டும். வா போகலாம் எனக் கூறுகிறான். அதைக் கேட்ட புரோகிதன் இல்லை இல்லை நான் நம்ப மாட்டேன். இந்தப் பசு மணமகனைக் கொம்பினால் குத்திக் கொல்வதைப் பார்த்தபின்தான் நம்புவேன் எனக் கூறியதும் அரசனுக்குக் கோபமும் வருகிறது. மணமகன் ஊர்வலம் அருகில் வந்துவிட்டது. எமதூதர்கள் பசுவைப் பார்க்கின்றனர். பசுவுக்கு உருவேறிக் கட்டி இருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு மணமகனின் வயிற்றில் கொம்பினால் குத்துகிறது. மணமகன் இறக்கிறான். மணவறை பிணப்பறையாக மாறுகிறது. பசு சாதுவாகி நிற்கிறது. அரசனும் புரோகிதனும் அங்கிருந்து சென்று வேடனை விடுவிக்கின்றனர்'. மன்னன் தவறான தீர்ப்பினை வழங்கினான் என்ற பழி மன்னனுக்கு வந்துவிடக்கூடாது என அஞ்சியமையினால் திருவிளையாடல் புராணத்தில் இக்கதை பழி அஞ்சிய படலமாக வைக்கப்பட்டுள்ளது. இக்கதை 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது'என்ற உண்மையை வெளிப்படுத்தி நிறகிறது.

'காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல்' காரண, காரியங்களும் அதற்கெனச் சூட்டப்படும் பெயரும் மாறிக் கொண்டு போகலாம். ஒருவர் இறப்பதற்கு அல்லது செயலொன்று நடப்பதற்குக் காரணம் ஒனறுதான் இருக்க முடியும். நமது அறியாமையின் காரணமாக பலவாறு கற்பிதம் செய்கிறோம். மகா பாரதத்தில் திருதராட்டினன் கிருஷ்ணரிடம் கண்ணா பாரதப் போரில் எனது பிள்ளைகள் நூறு பேரும் ஏன் இறந்தார்கள். அதற்கான காரணத்தைக் கூறு எனக் கேட்கிறார். அதற்குக் கிருஷ்ணர் கதை ஒன்று கூறுகிறேன் கேள் ஒரு மன்னனுக்கு விதம் விதமாகச் சமைத்துப் போடுவதற்கு கைதேர்ந்த சமையல்காரன் ஒருவனை வைத்திருந்தார். அவன் மன்னருக்குத் தினமும் வாய்க்கு ருசியாகச் சமைத்துக் கொடுத்தான். மன்னனிடம் இருந்து நல்ல பேர் வாங்க வேண்டும் என்பதற்காக ஏரியில் வளர்க்கப்பட்டு வந்த அன்னம் ஒன்றைப் பிடித்து சமைத்துக் கொடுத்தான். மன்னரும் இன்று சமையல் நல்ல ருசியாக இருக்கிறது பிரமாதம் என்று சமையல்காரனை வாழ்த்தினார். சமையல்காரனும் தினம் ஒரு அன்னத்தைப் பிடித்துச் சமைத்துக் கொடுத்தான். மன்னரும் மகிழ்ச்சியோடு உண்டு களித்து வந்தார். நூறாவது நாள் தாய் அன்னம் மன்னருக்குச் சாபமிடுகிறது. மன்னா எனது வாரிசுகள் நூறு அன்னங்களைக் கொன்று உண்டுவிட்டாய். நீ நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம். ஆனால் நீ தடுக்கவில்லை. அடுத்த பிறப்பில் உனக்கு நூறு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் உனக்கு வாரிசு இல்லாமல் கொல்லப்படுவார்கள். புத்திர சோகத்தால் நான் வருந்துவது போல் நீயும் வருந்துவாய். இது நடக்கும். எனக் கூறிச் சென்றுவிட்டது. இப்பிறவியில் நீதான் அன்னத்தினால் சாபமிடப்பட்ட மன்னன். அன்னத்தின் சாபப்படியே உனது புத்திரர்கள் அனைவரும் இறந்தார்கள். நீ இப்போது புத்திர சோகத்தால் வருந்திக் கொண்டிருக்கிறாய். இதுதான் உனது வினைப்பயன் என கிருஷ்ணர் கூறினார். இந்தக் காரண, காரியம் புரியாமல் பாரதப் போரின்மீது பழியைப் போடுகின்றோம். இவ்வாறுதான் ஒவ்வொன்றும் நடந்து நிறைவேறுகின்றன.

சூறாவளி, சுனாமி, வெள்ளம் வந்த போதும், உள்நாட்டு யுத்தம் ஏற்பட்ட போதும் பல உயிர், உடமைகள், உட்கட்டுமான வசதிகள் என எல்லாம் பாதிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் வணக்கத் தலங்களும் பாதிக்கப்பட்டன. அனர்த்தங்கள் ஏற்பட்ட போதெல்லாம் அழிவுகள் யாவும் நடந்தேறின. அனர்த்தங்கள் நடந்த போது கடவுளர்கள் அவர்களுக்கு அமைக்கப்பட்ட கோயில்களையோ உடமைகளையோ பாதுகாக்கவில்லை. நேபாளத்தில் நில நடுக்கம் றேபட்ட போது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட, மிகப் பழமைவாய்ந்த இரு கோயில்கள் அழிந்தன. அதேபோல் உத்தரகாண் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்ட போதும் ஒரிசா மாநிலத்தில் நில நடுக்கம் ஏற்பட்ட போதும் பல இந்துக் கோயில்கள் அழிந்தன. சிரியாவில் நில நடுக்கம் ஏற்பட்ட போது பல பள்ளிவாசல்கள் உட்படப் பல வணக்கத் தலங்கள் அழிந்தன. இந்தச் சந்தர்பங்களில் கடவுளர்கள் அதனைத் தடுக்க முற்படவில்லை. காரணம் அவர்கள் விருப்பு வெறுப்பு அற்றவர்கள், யாவும் கடந்தவர்கள் என்பதால் இன்னொருவருடைய துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தில் நம்மைப் போல் அவர்கள் பிறரின் பணியில் தலையிடவில்லை, தடுக்கவுமில்லை. நல்லதோ கெட்டதோ எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

பிறப்பு, வாழ்வு, சாவு, இன்பம், துன்பம், துயரம், வெற்றி, தோல்வி, சோதனை, வேதனை எல்லாமே நாம் பலவீனமாக இருக்கும் போது எம்மை வந்து சேரும். அது செய்ய வேண்டிய அனைத்தையும் செய்துவிட்டுச் செல்லும். இங்கு எதுவும் நிரந்தமல்ல. எல்லாமும் ஒரு முறைமைக்குட்பட்டே நடந்து கொண்டிருக்கின்றன. 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்' உறுதியோடு வாழ நினைப்பவன், வாழ முயற்சிப்பவன், சாதனைகள் பல புரிய எத்தனிப்பவர்கள் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழுவார்கள். ஏனையோர் வாழ்க்கையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பர். நடக்க வேண்டிய காரியம் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும். வாழ்க்கை ஒரு சக்கரம் போன்றது. அந்த வட்டத்துக்குள் ஒரு சதுரம் போலவே பெரும்பாலானோர் எல்லைப்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர். பிறப்பும் இறப்பும் நிரந்தரமானது என்பது போல் வாழ்வும் தாழ்வும் நிரந்தரமற்றது என்பதைப் புரிந்து கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதுவே உத்தமமானதுமாகும். நல்லதோ தீயதோ எல்லாமே நடக்க வேண்டிய காலத்தில் நடக்கும், நடந்திருக்கும். 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது' என்ற உண்மையைப் புரிந்து கொண்டு வாழப் பழகிக் கொள்வோம்.

நடப்பது எதுவாகினும்
அது விதிக்கப்பட்டதன் படியே
நடக்குமென்று முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும் எனக் கூறிச் சென்றனர்

வினை தொடரும்..

# நெருக்கடிகள் மத்தியில் மக்கள் பணியாற்றிய மூதூர் இந்து இளைஞர் மன்றத்தின் சேவைகள் தொடரவேண்டும்

திருகோணமலை மாவட்டத்தில் இந்து இளைஞர் மன்றங்கள் யுத்தகாலங்களில் குறிப்பிடத்தக்கபணிகளை பரவலாக ஆற்றிவந்துள்ளன.

ஏனைய மாவட்டங்களைவிட திருகோணமலையில் 55 இற்கும் மேற்பட்ட இந்து இளைஞர் மன்றங்கள் செயற்பட்டதுடன் அவற்றின்; இணைப்பு அமைப்பாக திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயற்பட்டுள்ளது.

இவற்றின் செயற்பாடுகாரணமாக கிழக்கில் குறிப்பிடத்தக்க அமைப்புக்கள் மேலும் உருவாக்கப்பட்டு மக்களுக்கான சேவையை அவை வழங்கி வருகின்றன.

ஆவற்றில் குறிப்பிடத்தக்கது மூதூர் அன்னை சாரதா மகளீர் இல்லம்;, மற்றும் இளைஞர் அபிவிருத்தி அகம் போன்ற அமைப்புக்களைச்சொல்லலாம்.

இந்தவகையில் அண்மைக்காலமாக குறித்த இந்து இளைஞர் மன்றங்கள், பேரவை உள்ளிட்டவைகளின் செயற்பாடு குன்றிக் காணப்படுகின்றன.

ஆயினும் அவற்றை மீளமைப்பதில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் பல்வேறு சமூக அரசியல் பின்புலங்களால் அவற்றின் வளர்ச்சி தடுக்கப்பட்டு வந்துள்ளது.

ஆயினும் அதனை புனரமைப்பதில் இன்றும் பல முயற்சிகளை எடுத்தவண்ணமே உள்ளோம் என மன்றத்தின் காப்பாளர் பொ.சற்சிவானந்தம் கூட்டத்தில் தெளிவு படுத்துகையில் குறிப்பிட்டார்.


இதன் ஒரு அங்கமாக பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மூதூர் பிரதேச இந்து இளைஞர் மன்றம் 17.06.2023 அன்று மீளப்புனரமைக்கப்பட்டது..

மூதூர் மத்தி கிராமசேவகர் திருமதி.இ.ஞா.சஞ்சுதா மூதூர் பிரதேசசெயலாளர் சார்பில் கலந்து கொண்டதுடன் இந்த மன்றத்தின்



சட்டரீதியான அங்கீகாரத்தை ஏற்படுத்திய முன்னைநாள் ஸ்தாபக செயலாளரும் தற்போதைய காப்பாளருமான பொன். சற்சிவானந்தமும் பிரசன்னமாகி இந்த பொதுக்கூட்டத்தை நடாத்தி புதிய நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு பேசிய தலைவர் திரு சந்துரு குறிப்பி



டுகையில் எமது காப்பாளரின் வழிகாட்டலில் இன்று இந்த சங்கம் மீளவும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அவரது தொடர் வழிநடத்தல் எமக்குத்தேவை. எமது மக்களின் பணிகளை தொடர் சகல உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

மூதூரைப்பொறுத்தவகையில் நகரத்தில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். யுத்த சூழல் காரணமாக ஆரம்பகாலங்களில் வாழ்ந்த பல பூர்வீக தமிழ் குடிகள் இடம்பெயர்ந்து விட்டனர். ஆரம்ப காலங்களில் 350இற்கும் மேற்பட்ட தமிழ் குடிகள் நகரில் வளமுடன் பலமுடனும் வாழ்ந்த வரலாறுகள் உள்ளன. ஆயினும் யுத்த மோதல்கள் , அச்சுறுத்தல்கள் காரணமாக அதிகளவிலான மக்கள் இடம்பெயர்வைசந்தித்துள்ளனர்.

இவ்வாறான யுத்த சூழுலில் மூதூர் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க பணியை ஆற்றிய அமைப்பே மூதூர் இந்து இளைஞர் மன்றமாகும். மாவட்டத்தில் சிறந்து விளங்கிய திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர்பேரவையின் ஆதரவுடன் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுக்கப்பட்டன.

அன்னைசாரதா மகளீர் இல்லம் உருவாக்கப்பட்டன. பல சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன.பல அமைப்புக்கள் மேலும் உருவாக்கப்பட்டன. புனர்வாழ்வு கல்வி, ஆன்மீகப்பணிகள் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

மூதூர் இந்து மன்றத்தின் முன்னாள் செயலாளர் சிறந்த சமூகப்பணியாளர், விஞ்ஞான பாட ஆசிரியருமான விவேகானந்தன் வசந்தகுமார் 1990.08.04ந்திகதி இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவர் சமூகத்தைநேசித்து பணியாற்றியமையால் இவ்வாறு தனது உயிரை விட்டார். அவரது காலத்தில் மன்றம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவருக்கு முற்பட்ட காலத்தில் இந்து வாலிபர் சங்கமென்ற பெயரில் இது இயங்கியிருந்தது.1969ம்ஆண்டு நவரெத்தினம் மண்டபம் ஒரு தனிநபரால் கட்டி கொடுக்கப்பட்டது.

இதில் கதிர்காம யாத்திரிகர்கள் தங்கி பயணிப்பது வழக்கமானது.

மூதூர் நவரெத்தினம் மண்டபம் இதன் அலுவலகமாக செயற்பட்டது. பிற்கலத்தில் 1996 காலப்பகுதியில் பொன்.சற்சிவானந்தம் பொறுப்பேற்று செயலாளராக கடமையாற்றியதுடன் சு.வேலுப்பிள்ளை தலைவராக செயற்பட்டதுடன் சற்சிவானந்தம் பேரவையிலும் துணைப்பொதுச்செயலாளராக கடமையாற்றினார்.

இந்தக்காலத்தில் (1997) இந்த மன்றம் சட்டரீதியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. மட்டுமன்றி பல அரச அங்கீகாரத்தையும் பெற்றது. மூதூர் ஸ்ரீசித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அது திருமதி சந்திரலீலா தலமையில் மண்டபத்தில் சிறப்பாக செயற்பட்டது. சாரதா இல்லம் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு இயங்கியது.

குறித்த காலத்தில் மண்டபத்தின் சுற்று மதில்



உள்ளிட்ட பல அபிவிருத்தி ப்பணிகளை மன்றம் செய்தது. பிற்காலத்தில் இந்து மக்களின் தேவைகருதி செயலாளரின் முயற்சியால் மூதூர் நொக்ஸ்வீதியில் முற்றவெளிப்பக்கமாக அரை ஏக்கர் காணியை சொந்த மாக பெற்றது.

இந்தக்காணியை தமிழரசுக்கட்சி முக்கியஸ்தரும் திருகோணமலை சரஸ்வதி தியேட்டர் உரிமையாளருமான எஸ்.தியாகராஜா நன்கொடையாக வழங்கியிருந்தார். இதனைக்கல்வி நடவடிக்கைக்கு பயன்படுத்தலாம் விற்கவோ கைமாற்றவோ கூடாது என்ற நிபந்தனையில் பெறப்பட்டது.

இதனைப்பெறுவதற்கான ஆதரவை முன்னாள் கட்டைபறிச்சான் கிராம சபைத்தலைவரும் ஊடகவியலாளருமான அமரர் சு.குணநாயகம் செயலாளருடன் இருந்த நல்ல தொடர்பு காரணமாக நல்கியிருந்தார்.

இந்த நிலையில் விடுதலைப்பலிகளின் மூதூர் அலுவலகம் தாக்கப்பட்டது உள்ளிட்ட 2002இல் மீளவும் எற்பட்ட கலவரநிலைகாரணமாக பலரும் இடம்பெயர்ந்தனர்.

இதனால் சற்று தளர்வு நிலமை ஏற்பட்டது. இந்நிலையில் குறித்த அரைஏக்கர் காணியை பலரும் அபகரிக்கமுற்பட்டனர்.

ஒருமுறை முறைகேடாக விற்றும் விட்டனர். இந்த சந்தர்பங்களில் செயலாளர் பொ.சற்சிவானந்தம் துரிதமாக செயற்பட்டு தற்போதைய தலைவர் திரு சந்துரு, செயலாளர் கே.ரி பொன்னுத்துரையுடன் இணைந்து மீள மீட்டனர்.

இவ்வாறு பல சவால்களுக்கு மத்தியில் இம்மன்றம் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றிவந்துள்ளது. எதிர் காலத்திலும் பல பணிகள் ஆற்ற சகலரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் பலரும் கோரிக்கைவிடுத்தனர்.

அறநெறிப்பாசாலை அபிவிருத்தி, இந்து மயானப்பராமரிப்பு, பேரவையின் சாரதா இல்லக்கட்டிடம், காணிகள், நவரெத்தினம் மண்டபம், 3ம் கட்டைமலைப்பிள்ளையார் பராமரிப்பு என பல பணிகள் காத்துக்கிடக்கின்றன.

அவை சிறப்பாக பாதுகாத்து மக்களுக்கு சேவையாற்றவேண்டும். முக்கியமாக மூதூரில் முக்கியமான பல இந்துப்பெரியார்கள் செயற்பட்டுள்ளனர். அவர்களை இளையோருக்கு இனம் காட்டுவதுடன் அவர்கள் நினைவு கூரப்படவேண்டும். இதற்கு மேலாக சிதறிக்கிடக்கும் இந்து மக்களை ஒருங்கிணைத்து ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். எனவும் இங்கு கருத்துக்கள் பகிரப்பட்டது.

கணக்கு பரிசோதகராக கடந்த ஆண்டு பொருளாளரும் ஆசிரியருமான செ.விஜயசீலன் தெரிவானார். போசகராக உதவிக்கல்விப்பணிப்பாளர் பு.கருணாகரனும் தெரிவானார்.

செயளலாளராக மீண்டும் ஓய்வு நிலை சுப்ராதர கிராமசேவகரும் சமூக செயற்பாட்டாளருமான கே.ரி. பொன்னுத்துரை தெரிவானார். மகளிர் மன்றத்தலைவி செ.வனிதா உள்ளிட்டவர்களும் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.



# சே குவேரா - ஓர் புரட்சி வீரனின் இறுதிக் கணங்கள்:

**(எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து. எல்லா யுகங்க ளிலும் ஒளிரும் விடிவெள்ளி. அவர் தான் 'சே'! இந்த புரட்சி வீரன் சேகுவேராவின் இறுதிக் கணங்களை உயிரூட்டமாக ஆவணப்படுத்தும் இந்த ஆக்கம், 'சே'யின் 1928 ஜூன் 14, பிறந்த நாளையோட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

ஒரு மாவீரனின் இறுதி மூச்சுக்கான வரலாறு எழுதப் பட தயாராகி கொண்டிருக்கின்றது என்பதை எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**மக்களின் விடிவிற்காக :**

இலத்தீன் அமெரிக்க மக்களின் விடிவிற்காக ஒரு புரட்சி வீரனின் இறுதிக்கணங்கள் இங்கே தான் எழு



தப்படப் போகிறது என்பதை யாருமே அறியவில்லை.

1966ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னர் மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, அர்ஜெண்டைனா, பொலிவியா நாடுகளில் பயணம் செய்தார் அந்த புரட்சியின் ஒளிர் முகம்.

1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு பொலிவியா நாட்டுக்குள் நுழைந்த அந்த மாவீரன் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது . அத்துடன் பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது .

பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்றே அவர் நினைத்தார்.

**பொலிவியாவில் புரட்சி :**

எதற்காக பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்றால்,

அமெரிக்கா பொலிவியாவைவிட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக் கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழ வில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் நீண்ட காலமாக மக்களோடு மக்களாக பதுங்கி இருந்து மக்களுக்காக மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரனே 'சே குவாரா"!

மிகுந்த மனவேதனையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து 'சே'யை வாட்டி வதைத்தது. போதிய வீரர்கள் இல்லா தது மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் 'சே' காடுகளில் அலைந்தார். சேயை தேடித் திரிந்த சி.ஐ.ஏ. ஏற்கனவே பொலிவியாவுக்குள்ளும் புகுந்து விட்டது.

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப் படுகின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.

இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறை கின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்றுவரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட பெயரில் ஒன்றே சே குவேரா.

**மருத்துவ பட்டதாரி :**

1928 ஜூன் 14இல் ஆர்ஜென்டீனா, ரொசாரியோவின் செல்வந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு மருத்துவராக பட்டம் பெற்ற இவர் நினைத்திருந்தால் தன் காலம் முழுவதும் வசதியான வாழ்க்கையை மேற்கொண்டி ருக்க முடியும்.

ஆனால் அனைத்தையும் துறந்து ஒடுக்கப்பட்ட மக்க ளுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும்.

பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக்கணங்கள் கூட ஒரு பரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செயத்து.

**'சே'யின் இறுதிக் கணங்கள் :**

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம்.

காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர் களுடன் 'சே' கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண்ணின் மேல் பரிதாபப் பட்டு ஐம்பது பெஸோக்களை பரிசாகத் தருகிறார்.

நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு 'சே'வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடுகின்றனர். பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கி யுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், 'நான்தான் 'சே'. நான்இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப் பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்' என்கிறார்.

காலில் குண்டு அடிபட்ட நிலையில் சே குவேரா மாலை 5.30அருகிலிருந்த

லா ஹிகுவேராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக சே'வை அழைத்து வருகின்றனர்.

அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் 'சே' கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறைவைக்கப்ப டுகிறார். இரவு 7.00 'சே பிடிபட்டார்" என சி.ஐ.ஏவுக் குத் தகவல் பறக்கிறது.. அதே சமயம், 'சே' உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், 'இது என்ன இடம்?' என்று 'சே' கேட்கிறார். பள்ளிக் கூடம் என அந்தப் பெண் கூற, "பள்ளிக்கூடமா ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?' என வருத்தப்படுகி றார். சாவின் விளிம்பிலும் 'சே'வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார்.

அக்டோபர் 9 அதிகாலை 6.00 லாஹிகுவேராவின் பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலிகாப்டர் வட்டம டித்தபடி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கேமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட் ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார்.

பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடை மைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட் டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் 'சே'வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி.

**அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் :**

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது என அவருக்கு வியப்பும் திகைப்பும்! பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக் கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப் படுகின்றன.

தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 'சே'வை உயிருடன் வைத்துக்கொண்டு விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதாபத்தையும், நாயகத் தன்மையையும் உரு வாக்கிவிடும் என்பதால், அவரை உடனடியாகத் தீர்த் துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.

காலை 11.00 'சே'வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகிறது. 'மரியோ ஜேமி" (Ma-r-io Jem-y) என் னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணியமர்த்தப்படுகிறார்.

மரியோ ஜேமி" கைகள் கட்டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

**வீரனாய் வீழ்ந்த சே :**



தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இத யம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்! மணி 1.10 மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பாய்கின்றது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான். சேவின் மார்புகளைத் தோட்டாக்களால் துளைத்தது. ஆனால் அந்த வீரனின் கண் இமைகள் அப் போதுகூட மூடிக்கொள்ளவில்லை. கண்கள் திறந்தபடியே தான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.

எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந் தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப்போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

## வீரனாய் வீழ்ந்த ஓர் விடிவெள்ளி !!!
## மக்களுக்காய் மரணித்த வீர வித்து !!

